பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 27 வியாழக்கிழமை 12.11.2020 கதிர் 238

## சிறுமி மீது துஷ்பிரயோகம்: 5 வருடக் கடூழியச் சிறை!

திருகோணமலை - சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 9 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 5 வருடக் கடூழியச் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பினை நேற்று திறந்த

2

# இம்முறை தீபாவளியை வீடுகளிலிருந்து கொண்டாடுங்கள்!

## இந்து மதத் தலைவர்கள் கூட்டாக அழைப்பு

இம்முறை தீபாவளியை இந்துக்கள் வீடுகளில் இருந்து இறைவனைப் பிரார்த்தனையோடு கொண்டாடுங்கள். கொடிய கொரோனா நோயிலிருந்து நாம் விடுபட வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வீட்டிலிருந்து அமைதியான முறையில் தீபாவளியைக் கொண்டாடுங்கள்.

- இவ்வாறு இந்து மதத் தலைவர்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் இந்துமா மன்றத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

உலகளாவிய ரீதியில் கொரோனாத் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் இலங்கையிலும் தற்போது தொற்று வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில், இந்துக்களின் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. எனவே, தற்போதுள்ள நிலைமையைக் கருத்தில்கொண்டு இந்து மக்கள்

2



## இரட்டைப் படுகொலை வழக்கில்

# பிள்ளையான் கட்சியின் செயலர் பிரசாந்தன் இன்று காலை கைது!

### 23ஆம் திகதி வரை விளக்கமறியல்

**பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று காலை கைதுசெய்யப்பட்டார்.**

**அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் உத்தரவிட்டார்.**

2



## நண்பர்களின் வீட்டுக்கு வந்து திரும்பியவர் விபத்தில் சாவு!

மட்டக்களப்பு மாவட்டம், வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 35ஆம் கிராம வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2

## கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் சிக்கினார்

யாழ். வடமராட்சி, இன்பர்சிட்டிப் பகுதியில் கேரளக் கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட 20 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவரிடமிருந்து ஒரு தொகை கேரளக் கஞ்சா மற்றும் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

2

## கொரோனா சாவு 48

### இன்று இருவர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு 12 ஐச் சேர்ந்த 54 வயதுடைய ஆணொருவரும், மீகொட பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஆணொருவருமே உயிரிழந்துள்ளனர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது.

## கனரக வாகனங்கள் மோதின மாங்குளம் பகுதியில் விபத்து



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ- 9 வீதியின் பனிக்கன்குளம் 232 ஆவது கிலோமீற்றருக்கும் 233 ஆவது கிலோ மீற்றருக்கும் இடைப்பட்ட பகுதியில் பாரிய விபத்து ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது தெய்வாதீனமாக யாருக்கும் உயிர் சேதங்கள் இடம்பெறவில்லை.

வவுனியா நோக்கி பெக்கோ இயந்திரத்தை ஏற்றி

2

## இந்து மக்களுக்கு பொலிஸாரின் வேண்டுகோள்!



தீபாவளி பண்டிகையை வீட்டிலேயே சுகாதாரப் பாதுகாப்புடன் கொண்டாடுங்கள் என்று இலங்கைவாழ் இந்து மக்களுக்கு இலங்கை பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2



## போகம்பர சிறைக் கைதிகள் கூரையில் ஏறிப் போராட்டம்

### பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளவும் இன்றேல் வேறு சிறைக்கு மாற்றவும் எனக் கோரிக்கை

கண்டி, போகம்பரயில் உள்ள பழைய சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர், சிறைச்சாலையின் கூரையின் மீது ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை

2

## யாழில் பிரபல தனியார் ஹோட்டல் சுகாதாரப் பிரிவினரால் பூட்டப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.12

யாழ் நகர மத்தியில் அமைந்துள்ள பிரபல தனியார் ஹோட்டல் ஒன்று யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் இன்று பூட்டப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி திருமண விழாக்கள் நடத்துவதாயின் சுகாதாரப் பிரிவினரிடம் முன் அனுமதி பெற்று நடத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும் குறித்த ஹோட்டலில் அனுமதி பெறாது சுகாதார நடைமுறையைப் பேணாது பிரமாண்டமாக இன்று திருமண நிகழ்வை நடத்த அனுமதித்ததன் காரணமாக குறித்த ஹோட்டல் தனிமைப்படுத்தப்பட்டு சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டுள்ளது.

## வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்து சிறுவன் பரிதாப உயிரிழப்பு

### கிளிநொச்சியில் இன்று சோகம்



(ந.லோகதயாளன்)

தற்காலிக வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததில் 8 வயதுச் சிறுவன் பலியான சம்பவம் கிளிநொச்சியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாகப் பெய்த பலத்த மழை காரணமாக குறித்த பகுதியில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

2

## வீட்டின் சுவர் இடிந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன் காரணமாக தற்காலிக வீட்டின் சுவர் ஈரமடைந்து இன்று காலை விழுந்ததில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொண்டமான்நகர் பகுதியில் குறித்த சம்பவம் இன்று முற்பகல் 11 மணியளவில் பதிவாகியுள்ளது.

தாயார் உணவு தயாரித்துக்கொண்டிருந்தபோது உயிரிழந்த சிறுவன் உணவருந்திக் கொண்டிருந்துள்ளார். இதன் போது திடீரென சுவர் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் சிக்கிய சிறுவன் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

எனினும், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார்.

தொண்டமான்நகர் பகுதியைச் சேர்ந்த நிரோஜன் ரிசாந்தன் (வயது - 08) என்ற சிறுவனே சாவடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் வெள்ள நீர் தேங்குவது தொடர்பான பல்வேறு தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை எனப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால் வருடம் தோறும் 40 குடும்பங்கள் வரை பாதிக்கப்படுகின்றன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபையால் குறித்த வடிகாலமைப்பு வசதியை ஏற்படுத்தித் தருமாறு பலமுறை கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், இது வரை தீர்வு எட்டப்படாத நிலையில் இன்று ஒரு சிறுவனின் உயிர்பிரிந்துள்ளது என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தின் மிகுதிப் பணம் வழங்கப்படாமையாலேயே நிரந்தர வீட்டுக்குள் செல்ல முடியாது போயுள்ளது எனவும், அவர்களுக்கான நிரந்தர வீடு அமைக்க மிகுதிப் பணத்தை உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## போகம்பர சிறைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொள்ளுமாறு கோரியே அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்

கொரோனா வைரஸ் காரணமாக கண்டி போகம்பர பழைய சிறைச்சாலைக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ள 30 இற்கும் மேற்பட்ட கைதிகளினால் தற்போது அங்கு தங்கியுள்ள ஏனைய கைதிகளின் உயிருக்கு ஆபத்து இருக்கின்றது கூறி, சுமார் 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் இன்று காலை முதல் கூரையில் ஏறிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட, சுமார் 800 பேர், சிறைச்சாலை திணைக்களத்தின் கட்டுப்பாட்டில், கண்டியிலுள்ள போகம்பர பழைய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு, கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள 30 கைதிகள் உள்ளனர் எனவும், தங்களில் பலருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ப்படவில்லை எனவும், அவ்வாறு தங்களின் பரிசோதனைகள் விரைவுபடுத்தப்படாவிட்டால், தங்களை வேறு சிறைக்கு மாற்றுமாறும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கண்டி பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுதத் மாசிங்கவிடம் விசாரித்த போது, தனித்தனியாக தடுத்து வைக்கப்பட்ட இந்தக் கைதிகள் ஒன்றாகச் சேர்ந்துள்ளதால், கொரோனா வைரஸ் மேலும் பரவும் அபாயம் உள்ளது எனவும், மேலும் தற்போதைய நிலைமைகளைச் சீர்செய்ய அவர்கள் அனைவருக்கும் பி.சி. ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## கனரக வாகனங்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வந்த வாகனம் ஒன்றின் சில்லு காற்று போன காரணத்தினால் வீதியோரத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வவுனியாவை நோக்கி வந்த இன்னுமொரு கென்டெயினர் பாரவூர்தி, நின்று கொண்டிருந்த வாகனத்துடன் மோதுண்டதில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்த வாகனங்கள் கடுமையாக மோதுண்டு சேதமடைந்துள்ள போதும் தெய்வாதீனமாக உயிர் சேதங்கள் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என அறியமுடிகிறது.

மாங்குளம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இந்து மக்களுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் இன்று விசேட அறிவிப்பொன்றை விடுத்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண கூறியவை வருமாறு:-

எதிர்வரும் 15 ஆம் திகதி நள்ளிரவு வரை மேல்மாகாணத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, எவராவது வெளியேற முற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, தனிமைப்படுத்தல் கால எல்லை முடிவடையும் வரை நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்பட வேண்டும்.

அதேவேளை, மேல் மாகாணத்திலும் அதற்கு வெளியில் உள்ள தமிழ் மக்களிடமும், தீபாவளியை உங்கள் வீட்டுக்குள்ளேயே சுகாதாரப் பாதுகாப்புடன் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சமூகமாக இணைந்து கொண்டாடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் - என்றார்.

## கேரளக் கஞ்சாவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கஞ்சா கடத்த முயற்சி தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைவாக காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, இன்பர்சிட்டி பகுதியில் வைத்து நேற்று மாலை 5.30 மணியளவில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும், அவரிடமிருந்து 3 கிலோ 335 கிராம் கேரளக் கஞ்சா, ஒரு தொகைப் பணம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் விசேட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

## நண்பர்களின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று இடம்பெற்ற இவ்விபத்தில், கடொல் மிஸ்திரிகே கமல் வர்ண தேப்பிரிய (வயது 35) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது இருப்பிடமான ரஜகரதென்ன பிரதேசத்திலிருந்து தனது நண்பர்களின் வீட்டுக்கு வந்துவிட்டு திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் வெட்டப்பட்டுக் கிடந்த மரத்துடன் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதவானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற களுவாஞ்சிக்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தைப் பார்வையிட்டமையுடன், அதன் பின்னர் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

சம்பவம்பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுமி மீது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிமன்றில் வாசித்துக்காட்டி தீர்ப்பளித்தார்.

2012 ஆம் ஆண்டு சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ரயில் நிலைய விடுதியில் வசித்து வந்த 9 வயது சிறுமி, அருகில் உள்ள வீட்டுக்கு காற்றடிக்கும் பம் கொடுக்கச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார். பிள்ளை வீட்டுக்கு திரும்பி வரவில்லை என அவரது தந்தை தேடிச் சென்றுள்ளார். அப்போது பாழடைந்த வீட்டுக்குள் வைத்து தனது நண்பர் மூலம் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் 9 வயது சிறுமியை பாலியல் குற்றம் செய்தமை தொடர்பில் திருகோணமலை மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் 2 குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதையடுத்து மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதில் 2 குற்றச்சாட்டுகளுக்கும் ஐந்து வருட கடூழிய சிறை தண்டனை விதிக்குமாறும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபாய் நஷ்டஈடு செலுத்துமாறும் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு வருடக் கடூழிய சிறை தண்டனை அனுபவிக்குமாறும் நீதிபதி கட்டளையிட்டார். இதே வேளை அரச செலவாக பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் அப்பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு மாத கால கடூழிய சிறை தண்டனை வழங்குமாறும் மேலும் கட்டளையிடப்பட்டது.

## விபத்தில் சாவு

மட்டக்களப்பு- சித்தாண்டி பிரதேசத்தில் இன்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு - கொம்மாதுறை கண்ணகி வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய செல்வகுமார் கிரோர் என்பவரே பலியானவரென ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர். அதிகாலை 1.30 மணியளவில் இடம் பெற்றுள்ள இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இவ்வாலிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றில் பணியாற்றிய இவ்விளைஞர் கொம்மாதுறையிலுள்ள அவரது வீட்டிலிருந்து இரவு 8.00 மணியளவில் புறப்பட்டு வாழைச்சேனைக்கு செல்வதாகக் கூறிச் சென்றுள்ளார்.

எனினும் இரவு ஏதோ ஒரு இடத்தில் தரித்துநின்றுவிட்டு அதிகாலைவேளையில் மோட்டார் சைக்கிள் அதிகவேகமாகச் சென்று சித்தாண்டி பிரதேச கடைத்தொகுதியொன்றில் மோதியுள்ளது.

ஏறாவூர்ப் பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இம்முறை தீபாவளி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீபாவளியை வீடுகளிலிருந்து ஒன்றுகூடல்களைத் தவிர்த்து அகவணக்கம் ஊடாகக் கொண்டாடுங்கள்.

அவ்வாறு கொண்டாடுவதன் மூலம் தொற்று ஏற்படுவதைத் தடுக்க முடியும். அத்தோடு தீபாவளி நாளன்று ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டை மேற்கொள்ளாது வீடுகளிலிருந்து தத்தமது குலதெய்வங்களைப் பிரார்த்தியுங்கள் - என்றார்கள்.

## பிள்ளையான் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரையம்பதியிலுள்ள தனது வீட்டில் வைத்து பிரசாந்தன் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இந்தநிலையில், வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் 2019ஆம் ஆண்டு மே மாதம் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பிரசாந்தன், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 23 திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கைதிகளை எப்படிக் காப்போம்?

கொரோனா வைரஸ் – கொடூர கொள்ளை நோய் – சற்றுக் காலம் பிந்தியேனும் இலங்கையில் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது.

இலங்கைக்கு இந்தத் தொற்று ஏற்பட்ட பின்னர் வெலிசறை கடற்படை முகாம் கொத்தணி, கந்தக்காடு புனர்வாழ்வு மையக் கொத்தணி என வைரஸ் பரவல் கட்டவிழ்ந்த போதிலும், ஏதேனும் ஒரு கட்டத்தில் அது மட்டுப்படுத்தல்களுக்குள் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும் அது எல்ல மீறிக் கொண்டு போகின்றது. அதனால் புதிய புதிய கொத்தணிகள் உருவாகுகின்றன.

இப்போதைய தொற்று வரிசையில் ஆரம்பத்தில் மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையை ஒட்டி ஒரு கொத்தணி பரவியது.

பின் அதிலிருந்து, பேலியகொடை மீன் சந்தை கொத்தணி ஏற்பட்டு, மிக மோசமாக வைரஸ் பரவல் தொடர்ந்தது.

இப்போது போகம்பரை சிறைச்சாலைக் கொத்தணி, பொலிஸாருக்கான தொற்றுக் கொத்தணி என்று புதிது புதிதாக பரவல் மையங்கள் உருவெடுக்கின்றன.

போகம்பரைச் சிறைச்சாலையில் மட்டுமல்லாமல், வெலிக்கடை, மாத்தறை மற்றும் குருவிட்ட ஆகிய சிறைகளில் மொத்தம் 130 பேருக்கு இத் தொற்றுப் பரவியுள்ளது.

இப்படி சிறையில் அடக்கி, தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு இத்தொற்று ஏற்பட வழி செய்திருப்பதும், அத்தகைய தொற்று ஏற்படத்தக்க வகையில் அவர்களை நெருக்கமாகவும் குறுகிய பிரதேசத்துக்குள்ளும் தடுத்து வைத்திருப்பதும் ஒரு சமூகக் குற்றமாகக் கருதக் கூடிய நிலைமையாகும்.

சிறைச்சாலைக் கைதிகளைத் தனிமைப்படுத்துவதற்காக போகம்பரை சிறைச்சாலை ஒதுக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தலுக்காக அங்கு எண்ணூறு கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர். அதில் முப்பது கைதிகளுக்கும் மற்றும் இரண்டு அதிகாரிகளுக்கும் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

போகம்பரைச் சிறைச் சூழலில் தங்கள் அனைவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட அதிக வாய்ப்புகள் இருக்கின்றமையால் தங்களை வேறு பாதுகாப்பான சிறைகளுக்கேனும் மாற்றுமாறும், அனைவருக்கும் பி. சி. ஆர். பரிசோதனை செய்யுமாறும் கோரி போகம்பரை பழைய சிறைச்சாலையின் கூரை மீது ஏறி கைதிகள் சிலர் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதேபோன்ற பெரும் இக்கட்டில்தான் நமது அரசியல் கைதிகளும், சிக்குண்டு இருக்கின்றனர்.

இவ் விடயத்தில் நமது அரசியல் கைதிகளின் அவல நிலையை அவர்களின் சார்பில், அவர்களின் நலனைக் கவனிக்கும் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு மனதை உருக்கும் வகையில் அம்பலப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஆகக் கூடியது 12 ஆயிரம் கைதிகளைத் தடுத்து வைக்கக் கூடிய சிறைகளில் சுமார் 37 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கும் – அடைத்து வைக்கும் – பேரவலம் தொடர்கின்றது.

இப்படி நெருக்கமாக – முண்டியடுத்து – கைதிகளை அடைத்து வைத்தால் அங்கு சமூக இடைவெளி எப்படிப் பேணப்பட முடியும்? தொற்று ஏற்படாமல் அவர்களை எப்படிப் பாதுகாக்க முடியும்? – என்று அந்த அமைப்பு கேள்வி எழுப்புவதில் நியாயம் அதிகம் இருக்கின்றது.

சுமார் 15 முதல் 25 வருடங்கள் வரை நீதி கிட்டாமல் – தொடர்ந்து – தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் நீரிழிவு, மன உளைச்சல், சுவாசக் கோளாறு போன்ற நீண்ட கால தொற்றா நோய்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு உடல், உளப் பாதிப்புகளுக்கு உள்ளாகி, உடல் தளர்ந்து பாதிக்கப்பட்டிருப்போரை, கொரோனா வைரஸ் என்ற கொடூரன் இலகுவில் பதம் பார்த்து விடுவான் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆக, இப்போது பரவி வரும் கொரோனா நோய்த் தொற்று – அதுவும் சிறைகளில் அதன் வீரியமும் கைவரிசையும் தென்படத் தொடங்கியுள்ள சூழலில் – தமிழ் அரசியல் கைதிகளுக்கு அது மரணப் பொறியாக மாறும் பேராபத்து உள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

*"சிறைச்சாலைகளைப் பொறுத்த மட்டில் எவ்வித சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளையும் பின்பற்றக் கூடியனவாக அவை இல்லை. சிறைச்சாலையிகளில் சமூக இடைவெளி, தொற்று நீக்கல், பரிந்துரைக்கப்பட்ட முகக்கவசம், நோய் எதிர்ப்பு சக்திகளை அதிகரிக்கக் கூடிய செயற்றிட்டம் என எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் அங்கு மேற்கொள்ளப்படுவதாக இல்லை. இத்தகைய சூழலில் கொத்தணி ஒன்று ஏற்படுவதைத் தவிர்த்து சிறைக் கைதிகளைத் தொற்றிலிருந்து காப்பது எங்ஙனம்?"* – என்று 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு எழுப்பியுள்ள கேள்வி நியாயமானது.

இந்தப் பேரவலத்திலிருந்து – பேரழிவிலிருந்து – நமது தமிழ் அரசியல் கைதிகளைக் காப்பது எங்ஙனம்? தமிழ்ச் சமூகம் விரைந்து முடிவெடுக்க – தீர்மானிக்க – வேண்டிய விடயம் இது!

## தற்கொலைக்கு ஒப்பானது 20 ஆவது திருத்தச் சட்டம்!

### என்கிறார் கரு ஜயசூர்ய



கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலுக்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கத்துடன் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நின்றார்கள்.

அதனூடாக வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்தபோது, மக்களின் ஒற்றுமையைப் பலிகொடுத்தேனும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதே அரசாங்கத்தின் தேவையாக இருந்தது. 20 ஆவது திருத்தம் ஒரு தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது என்பதையே மீண்டும் சுட்டிக்காட்டுகிறோம் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கொண்ட பதிவில் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கத்துடன் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நின்றார்கள்.

அதனூடாக வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது, மக்களின் ஒற்றுமையைப் பலிகொடுத்தேனும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதே அரசாங்கத்தின் தேவையாக இருந்தது.

ஆனால் தற்போதுவரை குறைந்தபட்சம் பொருள்களின் விலைகளிலேனும் மட்டுப்பாட்டைப் பேணுவதற்கு அரசாங்கம் தவறியிருக்கிறது.

நாங்கள் மீண்டும் கூறுகின்றோம். அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் என்பது உண்மையில் ஒரு தற்கொலை முயற்சி.

மேலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பது முக்கிய மைல்கல்லாகும்.

அந்தத் தடுப்பு மருந்து அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருப்பதை உலகத் தலைவர்கள், சர்வதேசக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

இதுவே மனிதாபிமானத்துக்கு ஏற்படக் கூடிய மிகப்பெரும் சவாலாக இருக்கும் .– என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## ரேபிட் ஆன்டிஜென் சோதனைக்கான கருவிகள் நாடு வந்து சேர்ந்தன!



தென்கொரியா நன்கொடையாக வழங்கிய 30 ஆயிரம் ரேபிட் ஆன்டிஜென் சோதனை கருவிகள் நேற்று புதன்கிழமை நாட்டை வந்தடைந்துள்ளன.

30 ஆயிரம் ரேபிட் ஆன்டிஜென் சோதனை கருவிகளும் 11 பெரிய பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில் இலங்கை ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல் – 471 என்ற விமானத்தின் மூலம் தென்கொரியாவிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

## வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வைப்பு!

### களுத்துறை மாவட்டத்தில்

களுத்துறை, நவ.12

களுத்துறை மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் 47 ஆயிரம் பேருக்கான கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் இந்தக் கொடுப்பனவு அடுத்த வாரம் முதல் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் பிரசன்ன கினிகே தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் கொவிட் – 19 நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா உதவித் தொகையை பகிர்ந்தளிக்க 131 கோடி ரூபா அரசாங்கத்துக்குக் கிடைத்திருப்பதாகவும் பிரசன்ன கினிகே தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் 2 லட்சத்து 63 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள 5 ஆயிரத்து 295 குடும்பங்கள் மத்தியில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன என்றும் களுத்துறை மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தியவன்னை ஏரியில் மூழ்கி இளைஞன் ஒருவர் மாயம்!

கொழும்பு, நவ.12

தியவண்ண ஏரியில் மூழ்கி 26 வயதுடைய இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

தியவண்ண ஏரியில் நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடி படகொன்றும் பிறிதொரு படகொன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது படகிலிருந்த ஒருவர் நீந்தி கரைசேர்ந்தமையுடன், மற்றையவர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார்.

இந்நிலையில் காணாமல்போன இளைஞரை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கொரோனாவினால் பாதிக்கப்பட்ட தாய் அச்சமின்றி குழந்தைக்கு பாலூட்டலாம்!

நாட்டில் பரவிவரும் கொரோனா தொற்றானது வயது, பால் வேறுபாடின்றி சகலருக்கும் ஏற்பட்டுவரும் தொற்று நோயாக மாறி வருகிறது.

இந்நிலையில், தாய்பாலூட்டும் தாயொருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகும் நிலையில், அந்தத் தாய், எவ்வித அச்சமும் இன்றி குழந்தைக்கு தொடர்ந்தும் பாலூட்டலாம் என சுகாதார அமைச்சின் போசாக்கு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை வைத்தியர் லக்மினி மெகொடரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனா குணமடைவு!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 80 லட்சத்தைக் கடந்துள்ளது.

இதன்படி மொத்தமாக 80 லட்சத்து 64 ஆயிரத்து 548 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அத்துடன் 4 லட்சத்து 91 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை நேற்று (புதன்கிழமை) புதிதாக 48 ஆயிரத்து 285 பேர் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 86 லட்சத்து 84 ஆயிரத்து 39 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 550 பேர் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 165 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு எதிராக ஏவப்படும் தீவிரவாதம்!

## ஒப்புக்கொண்டது பாகிஸ்தான்



இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் மண்ணில் இருந்தே, தீவிரவாதிகள் ஏவப்படுகின்றமையை, பாகிஸ்தான் அரசே ஒப்புக்கொண்டுள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசின் ராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றியாகவே இது கருதப்படுகிறது.

தீவிரவாததாக்குதல் தொடர்பாக, இந்தியா புகைப்பட ஆதார, ஆவணங்களுடன், குற்றச்சாட்டுகளை முன்வைத்தபோதும், பாகிஸ்தான் ஏற்க மறுத்தது.

இந்நிலையில், சர்வதேச அழுத்தம் காரணமாக கதிகலங்கி போயுள்ள பாகிஸ்தான், தனது மண்ணில் இருந்துதான், பயங்கரவாதம் ஊக்குவிக்கப்படுவதை முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டின், மத்திய புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ள 880 பக்க அறிக்கையில், 11 தீவிரவாதிகளையும் பட்டியலிட்டு, தேடப்படும் தீவிரவாதிகளாக, பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

# ஜோ பைடனின் அதிகார மாற்று ஆய்வு குழுவில் 20 இந்தியர்கள்!



அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள ஜோ பைடனின் அதிகார மாற்று ஆய்வு குழுக்களில் இந்திய வம்சாவளியினர் இடம்பிடித்துள்ளனர். இந்தக் குழுக்களில் 20 இந்தியர்கள் இடம்பிடித்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ளார். அவர் அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக வருகிற ஜனவரி 20 ஆம் திகதி பதவியேற்கிறார்.

இதையொட்டி தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்திடம் இருந்து ஆட்சி அதிகாரத்தை ஜோ பைடனுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக ஜோ பைடன் தரப்பில் அதிகார மாற்று குழு அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் சீரான அதிகார மாற்றத்தை உறுதி செய்யவும், தற்போதைய நிர்வாகத்தில் உள்ள முக்கிய கூட்டாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யவும் ஏ.ஆர்.டி. என்று அழைக்கப்படும் அதிகார மாற்று ஆய்வு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த குழுக்களில் இந்திய வம்சாவளியினர் 20 பேர் இடம் பிடித்துள்ளனர். அவர்களில் 3 பேர் குழுக்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அருண் மஜும்தர் எரிசக்தி துறைக்கான ஏ.ஆர்.டி. குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் ராகுல் குப்தா என்பவர் தேசிய மருந்து கட்டுப்பாட்டு கொள்கைக்கான ஏ.ஆர்.டி குழுவின் தலைவராகவும், கிரன் அஹுஜா என்பவர் பணியாளர் மேலாண்மை அலுவலகத்துக்கான ஏ.ஆர்.டி. குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர, தேசிய பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, வங்கி நிர்வாகம் உள்ளிட்ட 17 துறைகளில் நிபுணத்துவம் பெற்ற இந்திய வம்சாவளியினர் 17 பேர் அந்தந்த துறைக்கான ஏ.ஆர்.டி. குழுவின் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மண்ணில் உயிருடன் புதைக்கப்பட்ட சிசு மீட்பு!



உத்தரகாண்ட் மாநிலத்தில் பண்ணையில் உயிருடன் புதைக்கப்பட்ட சிசு பத்திரமாக மீட்கப்பட்டது.

நேபாள எல்லையில் உள்ள கட்டிமா என்ற கிராமத்தில் பண்ணையில் சிலர் வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது துணியில் சுற்றப்பட்டு, மண்ணுக்குள் அரைகுறையாக புதைக்கப்பட்ட நிலையில் பிறந்து சில மணி நேரங்களேயான சிசு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அங்கிருந்த பணியாளர்கள் அந்தச் சிசுவை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

# இணையவழி ஊடகங்கள், சமூகவலைத்தளங்கள் இந்தியாவில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன

இணைய ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் முதற்கட்டமாக தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இணையத் தளங்களைக் கொண்டு வருவதற்கான உத்தரவை மத்திய அரசு நேற்று வெளியிட்டுள்ளது.


இதன்படி, நெற்பிளிக்ஸ், சமூக ஊடகத் தளங்களான பேஸ்புக், ருவிற்றர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்றவையும் அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுகின்றன.

இதேவேளை, உள்ளூர் ஊடகங்கள் போல் இணைய ஊடகங்களின் ஒழுங்குமுறையை விவரிக்கும் சட்டத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் என இணைய சுதந்திர அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் அபர் குப்தா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மின்னணு ஊடகங்கள் 1995 ஆம் ஆண்டின் கேபிள் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஒழுங்குமுறை சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டன.

எனினும், கடந்த காலத்தில் டிஜிட்டல் உள்ளடக்கத்தை மேற்பார்வையிட எந்த சட்டமும் அமைப்பும் இதுவரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய - சீனா இடையே ஒப்பந்தம் கைச்சாத்து?



கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் நிலவி வரும் பதற்றமான சூழலுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தியா - சீனா இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பனிக்காலம் தொடங்கிவிட்ட போதிலும், லடாக் எல்லையில் இரு நாடுகளும் தங்கள் படைகளைக் குறைக்கவில்லை. அதன் காரணமாக லடாக் எல்லைப் பகுதிகளில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த விவகாரத்தால் இந்தியா - சீனா இடையேயான நல்லுறவில் விரிசல் தோன்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இரு நாடுகளிடையே இராணுவ ரீதியாகவும் தூதரக அதிகாரிகள் இடையேயும் பேச்சு நடைபெற்றது.

ஆரம்பக் கட்ட பேச்சுகளில் சுமுகத் தீர்வு எட்டப்பட்டதையடுத்து ஹாட் ஸ்பிரிங்ஸ் கல்வான் பள்ளத்தாக்கு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வெளியேற சீன இராணுவத்தினர் ஒப்புக்கொண்டனர். எல்லைப் பகுதிகளில் படைகளைக் குறைக்கவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன. அந்தப் பேச்சுகளின் அடிப்படையில் எல்லைப் பகுதிகளில் முதற்கட்ட படைகள் குறைப்பு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து தௌலத் பெக் ஓல்டி, தெப்சாங், பாங்காங் ஏரி உள்ளிட்ட பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள படைகளைக் குறைப்பது தொடர்பாக இரு நாட்டு ராணுவங்களின் துணைத் தலைமைத் தளபதிகள் தொடர்பான பேச்சில் ஈடுபட்டனர். எல்லையில் பதற்றைத் தணிப்பது தொடர்பாக இதுவரை எட்டுக்கட்ட பேச்சுகள் நடைபெற்றுள்ளன.

எட்டாம் கட்ட பேச்சில் எல்லைப் பதற்றத்தைத் தணிப்பது தொடர்பாக சுமுகத் தீர்வு எட்டப்பட்டதாகவும் விரைவில் நடைபெறவுள்ள அடுத்தகட்ட பேச்சின் போது இந்த விவகாரத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1992.07.31
மதம் - இந்து K
நட்சத்திரம் - மகம்
செவ் - 7இல்
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer
அழகான பெண், நல்ல குடும்பம் விரும்பத்தக்கது.

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1991.12.12
மதம் - இந்து K
நட்சத்திரம் - அவிட்டம் 4
பாவம் - 4
செவ்/ சூரி - 9இல்
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# கமலா ஹறிஸின் சிரேஷ்ட ஆலோசகர் பதவிக்கு இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் பெண்!






அமெரிக்காவின் உப ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் கமலா ஹறிஸின் அலுவலகப் பிரதானியும் சிரேஷ்ட ஆலோசகருமான ரோஹினி லக்ஷ்மி ரவிந்திரன் இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட ஓர் அமெரிக்கத் தமிழ்ப் பெண்ணாவார்.

இலங்கையிலிருந்து 1980 களின் ஆரம்பத்தில் அமெரிக்காவின் நியூஜேர்ஸிக்கு புலம்பெயர்ந்த தமிழ்த் தம்பதிகளான வைத்தியர் விஜேயதேவேந்திரம் ரவீந்திரன், ரோபனா ரவீந்திரன் ஆகியோருக்கு மகளாகப் பிறந்த ரோஹினி மூன்று பிள்ளைகளின் தாயாவார்.

அவர் அமெரிக்காவின் மிச்சிக்கன் பல்கலைக்கழகத்திலும் ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்திலும் தனது உயர்கல்வியைப் பூர்த்திசெய்துள்ளார். மின்னஞ்சல் அலுவலக நிர்வாகியாகவே தேசிய அரசியலுக்கு அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து தேர்தலின் ஊடாகத் தெரிவாகிய உத்தியோகத்தர்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான ஆலோசகராக சுமார் 15 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றினார்.

தற்போது அமெரிக்காவின் உப ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் கமலா ஹறிஸின் அலுவலகப் பிரதானியாகவும் சிரேஷ்ட ஆலோசகராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவூதியில் குண்டு வெடிப்பு பிரான்ஸ் தூதரகம் அருகே





சவுதி அரேபியாவில் ஜெட்டா பகுதியில் உள்ள பிரான்ஸ் தூதரகம் அருகே குண்டுவெடிப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சவூதி அரேபியாவின் ஜெட்டாவில் உள்ள முஸ்லீம் அல்லாத கல்லறையில் ஐரோப்பிய இராஜதந்திரிகள் கலந்துகொண்ட முதலாம் உலகப் போரின் முடிவை நினைவுகூரும் 102 ஆவது ஆண்டு விழாவில் இந்தக் குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பில் பலர் படுகாயம் அடைந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. எனினும் குண்டுவெடிப்பில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான முழுதகவல்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள பிரான்ஸ் தூதரகம் –

'இந்த கோழைத்தனமான, நியாயப்படுத்த முடியாத தாக்குதலை பிரான்ஸ் கடுமையாகக் கண்டிக்கிறது.' எனத் தெரிவித்துள்ளது.

பிரான்ஸில், முஹம்மது நபி அவர்களின் கேலிச்சித்திரங்கள் காரணமாக தொடரும் தாக்குதலில், கடந்தமாதம் 16 ஆம் திகதி வரலாற்று ஆசிரியர் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இதனுடன் தொடர்பு பட்டதாக பிரான்ஸிலும் சவுதி அரேபியாவின் பல தாக்குதல் சம்பவங்கள் பதிவாகின.

இந்நிலையில் பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், இஸ்லாமிய தீவிரவாதத்தை எதிர்கொள்வதாக சபதம் செய்ததற்காக உலகின் பெரும் பகுதி முஸ்லிம்கள் அவர் மீது தமது கோபத்தை வெளிப்படுத்தியிருந்தனர். இதன் பின்னணியிலேயே இந்தக் குண்டுவெடிப்பு தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சீன தடுப்பூசி சோதனை பிரேஸிலில் மீள ஆரம்பம்



சர்ச்சைகளுக்கு மத்தியில் பிரேஸில் நாட்டில் சீன நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசியின் பரிசோதனை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிறுத்திவைக்கப்பட்டிருந்த சீன நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி பரிசோதனைக்கு பிரேஸில் சுகாதார கட்டுப்பாட்டு அமைப்பு 'அன்விசா' மீண்டும் அனுமதி வழங்கியுள்ளது.

பரிசோதனையில் பங்கேற்ற நபர் உயிரிழந்தமைக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் உயிரிழப்பு தற்கொலை காரணமாகவே நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், சீன தடுப்பூசி பரிசோதனையை மீண்டும் தொடங்க போதுமான தகவல்கள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சர்ச்சைகளுக்கு மத்தியில் பிரேஸில் நாட்டில் சீன நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசியின் பரிசோதனை மீண்டும் நடைபெற்று வருகிறது.

உலகளவில் கொரோனா வைரஸ் பாதிப்பில் பிரேஸில் 3 ஆவது இடத்தில் உள்ளது. அந்நாட்டில் 57 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேபோல், கொரோனா உயிரிழப்புகள் பட்டியலில் உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ள பிரேஸிலில் ஒரு லட்சத்து 63 ஆயிரத்துக்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இதற்கிடையில், சீன மருந்து நிறுவனமான சைனோவேக் 'கொரோனாவேக்' என்ற தடுப்பூசியை உருவாக்கியுள்ளது. இந்தத் தடுப்பூசி பிரேஸில் நாட்டில் 7 மாகாணங்களில் பொதுமக்களுக்கு செலுத்தி பரிசோதிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் 'கொரோனாவேக்' தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்தி சோதிக்கும் பரிசோதனையின்போது மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் ஒருவர் உயிரிழந்துவிட்டார் எனவும் உள்ளூர் ஊடகங்கள் நேற்று செய்திவெளியிட்டன.

இதன் காரணமாக சீன தடுப்பூசியின் பரிசோதனையை பிரேஸில் நாட்டின் சுகாதார கட்டுப்பாட்டு அமைப்பு 'அன்விசா' அதிரடியாக நிறுத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானுக்கு எதிராகத் தீர்க்கமான முடிவு எடுக்குமாறு வலியுறுத்தல்!

## சவுதி மன்னர் கோரிக்கை



அணுசக்தி மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணை திட்டங்களை உருவாக்குவதற்கான ஈரானின் முயற்சிகளுக்கு எதிரான ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்குமாறு சவுதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஜிஸ் உலக நாடுகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

ஈரானின் பிராந்திய திட்டங்களின் ஆபத்துகள், ஏனைய நாடுகளில் அதன் தலையீடு, பயங்கரவாதத்தை வளர்ப்பது, குறுங்குழுவாத அச்சுறுத்தல்களைத் தூண்டுதல் போன்றவற்றின் காரணமாக ஈரானுக்கு எதிரான சர்வதேச சமூகத்திடமிருந்து ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை கோருவதாகவும் அவர் கூறினார்.

அவரின் கருத்துக்களுக்கு ஈரான் உடனடியாகப் பதில் எதையும் தெரிவிக்காத நிலையில், தெஹ்ரான் முன்னதாக ஓர் அறிக்கையில் சவுதி அரேபியாவின் எம் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று கூறியிருந்தது.

சவுதி அரேபியாவின் செய்தி நிறுவனமான எஸ்.யு வியாழக்கிழமை நள்ளிரவுக்கு பின்னர் மன்னரின் உரையின் முழுப் பிரதியையும் வெளியிட்டுள்ளதுடன், நியோமில் உள்ள அவரது அரண்மனையிலிருந்து வீடியோலிங்க் மூலம் சபை உறுப்பினர்கள் முன் உரையாற்றிய மன்னரின் புகைப்படங்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் 2018 ஆம் ஆண்டில் உலக வல்லரசுகளுடனான ஒரு முக்கிய அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றி இஸ்லாமிய (ஈரான்) குடியரசு மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை மீண்டும் விதித்ததில் இருந்து இப்பகுதியில் பதட்டங்கள் அதிகரித்துள்ளன.

# தாய்வானுக்கான பேச்சை நிறுத்துக அமெரிக்காவுக்கு சீனா வலியுறுத்து!



அமெரிக்கா–தாய்வான் இடையே இந்த மாதத்தில் பொருளாதார பேச்சுகள் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் சென் சொன்சி தலைமையிலான ஒரு சிறிய தூதுக் குழுவை தாய்வான் அமெரிக்காவுக்கு அனுப்பவுள்ளது.

நவம்பர் 20 ஆம் திகதி அமெரிக்க – தாய்வான் பொருளாதார செழிப்பு கூட்டாண்மை பேச்சு நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தாய்வானுடனான உறவை அதிகரிப்பதை நிறுத்துமாறு சீனா அமெரிக்காவிடம் வலியுறுத்தியுள்ளது.

மற்ற நாடுகளுடன் உத்தியோகபூர்வ உறவுகளை உருவாக்குவதற்கான உரிமை இல்லாத சுயாட்சி தீவான தாய்வானை சீனா தனது சொந்த பிரதேசமாகக் கருதுகிறது.

இந்நிலையில், தாய்வானுடனான எந்தவோர் உத்தியோகபூர்வ பரிமாற்றங்களையும் தொடர்புகளையும் மேற்கொள்ள வேண்டாம் என சீனா தெரிவித்துள்ளது.

# முஸ்லிம் உடல் தகனம் செய்யும் விவகாரம் மீண்டும் இஸ்லாமிய அடிப்படை வாதமாகும்!

## எச்சரிக்கின்றார் ஞானசார தேரர்



கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் இனத்தவர்களின் உடலை தகனம் செய்வதை பிரதான மாக கொண்டு இஸ்லாமிய அடிப்படை வாதம் மீண்டும் தலைத்தூக்கியுள்ளது. பௌத்தர்கள் உரிமைகளை கோரினால் பாரிய நெருக்கடி ஏற்படும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பின் காரியா லயத்தில் கடந்த செவ்வாய்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத் துரைக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் தரப்பினரது உடல் களை எரிப்பதா, புதைப்பதா என்பது தற்போதைய பிரதான பேசுபொருளாக உள்ளது.

முஸ்லிம்களின் உடலை எரிக்க வேண்டாம் என இஸ்லாமிய அடிப்படை வாதிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஒழிப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஆட் சிக்கு வந்த ராஜபக்ஷர்களின் அரசாங் கம் தற்போது அடிப்படைவாதிகளின் ஆலோசனைகளுக்கு அடிபணிந்துள் ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

2005 – 2015 வரையிலான காலப் பகுதியில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியது. இதனை நாங்கள் பகி ரங்கப்படுத்திய போது எங்களை இன வாதிகள் என்று விமர்சித்தார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுடன் நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் எந்தளவிற்கு பலம்பெற்றுள்ளது என்பது. வெளிப்பட்டது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர் பாக ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர் பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் பல விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முற்றாக ஒழிப்பதை விடுத்து அவர்களின் கோரிக்கைக்கு சார்பாகச் செயற்படுகின்றமை பெரும் பான்மை மக்கள் வழங்கிய ஆணைக்கு முரணானது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்வது முஸ்லிம் சமயக் கோட் பாட்டுக்கு முரணானது என குறிப்பிடுகி றார்கள்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் கத்தோலிக்க சமயத்தவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படுகின்றன. இதன் போது மத சம்பிரதாய சடங்குகள் செயற்படுத்தப்படுவதில்லை. இதற்கு பௌத்தர்கள் போர்க்கொடிதூக்கவில்லை. நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக மாத்தி ரமே கவனம் செலுத்தப்பட்டது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலைத் தகனம் செய்ய சுகாதாரத் தரப்பினர் ஆரம்பத்தில் எடுத்த தீர்மானத்துக்கு ஏதுவான கார ணிகளை நாட்டு மக்களுக்கு சுகாதார தரப்பினர் பொறுப்புடன் பகிரங்கப்படுத்த வேண்டும்.

கொவிட் – 19 வைரஸ் தொடர்பில் இராணுவத் தளபதி, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மற்றும் சுகாதார தரப்பினர் என அவரவர் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். எவர் குறிப்பிடு வதை ஏற்றுக் கொள்வது என்ற குழப்பம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது ஆகவே எடுக்கும் தீர்மானத்தை ஒருவர் அறிவிக்க வேண்டும். – என்றார்.

# ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் மட்டக்களப்பில் பாரிய ஊழல்!

## கருணா வெளிப்படுத்தும் அம்பலம்

சிறந்த முறையில் திட்டமிடப்பட்டிருந்த ஒரு லட்சம் வேலைத் திட்டத்தில் மட்டக்களப்பில் பாரிய முறைகேடு கள் நடைபெற்றுள்ளன என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று (புதன்கிழமை) கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்:-

மக்களுக்காகத் தொடர்ந்து உழைக்க வேண்டும். தேர்தலுக்காக நாம் மக்களை ஏமாற்றக் கூடாது.

எனக்குக் கிடைத்த அதிகாரம் மிக்க பதவி ஊடாக மக்களுக்கு உதவி செய்வேன். இதற்கு கொரோனா நோய் தற்போது தடையாக உள்ளது. இந்த நோய் காரணமாக அமைச்சுக்கள் செயலிழந்துள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது தோல்வியடைந்த கலையரசன் என்பவருக்கு அம்பாறையில் பதவியைக் (தேசியப் பட்டியல்) கொடுத்துள்ளது.

அவர் வாகனத்தில் பவனி வருகின்றார். அவர் ஏதா வது ஒரு வேலைத்திட்டத்தை அம்பாறையில் செய்தால் நான் திரும்பிச் சென்றிருப்பேன். ஆனால் அவர் ஒன்றுமே செய்யப்போபவரல்லர். மக்களை ஏமாற் றவும் இருப்பைத் தக்க வைக்கவுமே அவர்கள் முயல் கின்றனர்.



இதேவேளை, எங்கள் அம்பாறை மாவட்ட மக்களை எமது இதயத்தில் இருந்து பிரிக்க முடியாது. நானும் கைவிட்டுப் போகமாட்டேன்.

அம்பாறை மாவட்ட மக்களை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்ல சகல அரசியல் கட்சிகளும் இணைய வேண்டும். இதனை ஓர் இனவாதமாக எவரும் பார்க்கக் கூடாது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும்.

இதேவேளை, சிறந்த முறையில் திட்டமிடப்பட்டி ருந்த ஒரு லட்சம் வேலைத் திட்டத்தில் மட்டக்களப்பில் பாரிய முறைகேடுகள் நடைபெற்றுள்ளன.

இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளேன். இந்த விடயத்துக்குத் தீர் வைப் பெற்றுத்தருவேன்.– எனத் தெரிவித்துள்ளார்.

# ஊழியர்களின் பி.சி.ஆர். அறிக்கையின் அடிப்டையில் பேலியகொட மீள திறப்பு!

## கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

ஊழியர்களின் இறுதி பி.சி.ஆர். அறிக்கையின் அடிப்படையிலே பேலியகொடை மீன் சந்தையை மீண்டும் திறப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜே சேகர தெரிவித்தார்.

பேலியகொட மீன்சந்தையில் பணிபுரியும் ஊழி யர்களில் பலருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டமையையடுத்து, அந்த மீன்சந்தையை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.



இதன்போது தொடர்ந் தும் கருத்துத் தெரிவித்த அவர் –

பேலியகொடை மொத்த மீன் சந்தை தொகுதியில் கொரோ னாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமை யைத் தொடர்ந்து, கடந்த மாதம் இறுதியில் மீன் சந்தையை தற்காலிகமாக மூடிவிடத் தீர்மானித் தோம்.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பாகக் கருத்திற்கொண்டு, அங்கு ஊழியர்களிடம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி பி.சி.ஆர். அறிக்கையின் அடிப் படையிலே, மீன் சந்தையை மீண்டும் திறப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

அத்துடன் மீன் சந்தை திறக்கப்படும்போது ஆரம் பமாக மொத்த வியாபாரிகளுக்கு மாத்திரம் திறக்கப் படும். பின்னர் சுகாதார வழிகாட்டல் மற்றும் சட்டத் தின் பிரகாரம் சில்லறை வியாபாரத்துக்கு முறையான வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கின் றோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# விவசாயிகளின் உற்பத்திகள் வீண்விரயமாக்கப்படமாட்டா!

## பஸில் உத்தரவாதம்



விவசாயிகளின் உற்பத்திகள் பயன் பெறாத வகை யில் வீண்விரயமாவதற்கு அரசு ஒரு போதும் இடமளிக் காது. மெனிங் பொதுச்சந்தைக்கு பதிலாக பேலியகொட பகுதியில் புதிய பொதுச்சந்தை நிர்மாணிக்கப்படும் என பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

மெனிங் மொத்த விற்பனை மத்திய நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதால் விவசாயிகள் பெரும். நெருக்கடியை எதிர்க் கொண்டுள்ளார்கள். விவசாயிக ளின் மரகறி உற்பத்திகளை விற்பனை செய்து கொள் வதற்கு பேலியகொட பகுதியில் புதிதாக விற்பனை மத்திய நிலையத்தை அமைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்த மான காணியில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி விரைவாக விற்பனை மத்திய நிலையத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மெனிங் மொத்த விற்பனை மத்திய நிலையம் மூடப் பட்டதால் விவசாயிகள் பாரிய நெருக்கடியை எதிர்க் கொண்டுள்ளார்கள். ஒரு நாளைக்கு மாத்திரம் 150 தொடக்கம் 200 வரையிலான லொறிகள் பல சிரமங் களுக்கு மத்தியில் பிற விற்பனை நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் மரக்கறிகளின் ஒரு கிலோவையேனும் பயன் பெறாத வகையில் வீண்விரய மாக அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. விவசாயி களுக்கு நிவாரணம் வழங்கப்படும். – என்றார்.

# திருகோணமலை வைத்தியசாலையில் மேலும் ஒரு வைத்தியருக்குத் தொற்று!

திருகோணமலை வைத்தியசாலையில் மேலும் ஒரு வைத்தியர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் என வைத்தியசாலை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள் ளனர்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளானவர் முன் னர் கொரோனா தொற்றுக்குள்ளான வைத்தியருடன் தொடர்புகளைப் பேணியவர் எனத் தெரியவந்துள் ளது.

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை அடை யாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 14 ஆகக் காணப்படுவதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறியுள் ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2020 இல் வெளியிடப்பெற்றது.